செ.வெ.எண்: 249 நாள்: 24.3.2020

**மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்வி விடுதிகளில் சமையலர் பணியிடங்களுக்கு விண்ணப்பத்திற்கான கடைசி தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல கல்வி விடுதிகளில் சமையலர் பணியிடங்களுக்கு விண்ணப்பத்திற்கான கடைசி தேதி ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் முன்னர் 14.03.2020 அன்று வெளியிடப்பட்ட பொது விளம்பர செய்திக் குறிப்பில் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலக கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் கல்வி விடுதிகளுக்கான சமையலர் காலிப்பணியிடங்களுக்கு தகுதியுடையவர்கள் 28.03.2020-க்குள் விண்ணப்பிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

தற்போது கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளதாலும், மேற்படி விண்ணப்பத்திற்கான கடைசி தேதி, நாள் குறிப்பிடபடாமல் ஒத்தி வைக்கப்படுகிறது. விண்ணப்பத்திற்கான கடைசி நாள் பின்னர், ஒரு வார காலத்திற்கு முன் அறிவிக்கப்படும். எனவே இதன்பொருட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகத்தை அணுகவேண்டாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை**